
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 09, 2022

Weekly E-paper ● July 09, 2022

## ஆரியக்காரிருள் கிழிக்கும் திராவிடச் சூரியன்!

காசு. நாகராசன்

**பிரிக்க வேண்டியது தமிழ்நாடு இல்லை, உத்தரப்பிரதேசம்!**

சாரதா தேவி

**பேரவையும், நட்புக் கழகமும் !**

தலையங்கம்

**பெரியாரின் பி.ஆர்.ஓ.-க்கள்!**

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 09, 2022 Weekly E-paper ● July 09, 2022


# ஆரியக்காரிருள் கிழிக்கும் திராவிடச் சூரியன்!

**காசு. நாகராசன்**

“திராவிடம் என்ற சொல்லை நான் திட்டமிட்டுத்தான் சொல்கிறேன்”



அமெரிக்கா மற்றும் கனடாவைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பான வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை ஃபெட்னா நடத்திய மாநாட்டில் தமிழ்நாட்டு முதலமைச்சர் காணொளி வழியாகப் பங்கேற்று உரையாற்றும்போதுதான் மேற்கண்ட செய்தியைச் சொல்லியிருக்கிறார்.

“இங்கே யார் திராவிடன்? நான் தமிழன். எனக்கு எதற்கு திராவிட அடையாளம்? திட்டமிட்டுத் தமிழையும் தமிழனையும் அடையாளம் இல்லாமல் செய்வதற்காக வடுக வந்தேறிகளால் கட்டமைக்கப்பட்டதுதான் திராவிடம்” - இப்படி ஒரு நபர் பத்து வருஷமாகத் தமிழ்நாட்டுத் தெருக்களில் கத்திக் கொண்டு திரிகிறார்.

அந்தக் காட்டுக் கத்தல் கொஞ்சம் கொஞ்சமாக இப்போது சுதியும், தாளமும் மாறி “ரெண்டுபேரும் எங்க ஆளுக” என்றும் “நான் சைவம் எனக்கெதுக்கு வந்தேறி மதங்கள்?” என்றும் அப்படியே சுழன்றடித்தபடி நாக்பூரை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம், “நானும் திராவிடன்தான் அண்ணா, பாருங்க நானும் கருப்புதான்” என்கிறது ஓர் அண்டங்காக்கை. இதென்னடா புதிய கரைச்சலாக இருக்கிறதே என்றால், அந்தக் காக்கை மநுதர்மம் சனாதனம் ஆகியவை நமது வாழ்வியல் என்று உளறுவதும், ஜாதிப்பிரிவினைகள் வெளியிலே இருந்து வந்த மதங்களால் உண்டானதென்றும், இந்து மதத்தைக் காக்கச் சண்டமாருதம் செய்வேன் என்றும் ஆட்டுப்படையோடு புறப்பட்டு அதுவும் நாக்பூர் வழியாகவே பயணிக்கிறது.

இவை போக, ‘திராவிடமல்ல தமிழ்’ என்கிற சில சில்வண்டுகளின் கூச்சல்களும் அவற்றை வழிமொழிந்து உளறிக் கொட்டும் சில வல்லூறுகளும் கடந்த பத்தாண்டுகளில் ஓயாத ஓட்டம் ஓடி, சமூகவெளியில் மிகப்பெரிய மாறுதல்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், எல்லா திராவிட அலர்ஜி நோயாளிகளுக்கும் முதல்வர் இந்த மாநாட்டு உரையில் அதிர்ச்சி வைத்தியம் செய்திருப்பதுதான் கூடுதல் சிறப்பு.

சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், சகோதரத்துவம், மானுடப்பற்று, தமிழ்மொழிப்பற்று, இன உரிமைகள் , கூட்டாட்சித்தத்துவம் , மாநில சுயாட்சித் தத்துவங்கள் கொண்ட திராவிட மாடல் அரசு என்று, இந்த அரசைப் பற்றிப் பிரகடனம் செய்தார் முதல்வர்.

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதைத் திராவிடக் கோட்பாடாகவும், எல்லார்க்கும் எல்லாம் கூடாது என்று நினைப்போரை எதிர்நிலையிலும் நிறுத்தி திராவிட எதிர்ப்புப் போராளிகளை அம்பலப்படுத்தி இருக்கிறார்.

கடவுள் - மதம் - ஜாதிப்பிரச்சனையில் கடவுளுக்கும் மதத்திற்கும் சொல்லுகிற சமாதானங்ககளைக் கூட ஜாதிக்குச் சொல்ல முடியாதென்றும் தமிழர்களைப் பிளவுபடுத்தும் முழுமுதல் ஆயுதமாக ஜாதி இருக்கிறது. ஜாதி ஒழிந்த தமிழர்களாக நாம் தமிழால் ஒன்றிணைவோம் என்றும் சொல்லியிருக்கிறார் முதல்வர்.

ஜாதியாய்க் குவிக்கப்படுவோரை மொத்தமாய்க் கூட்டி அள்ளிக்கொண்டு போய்விடலாம் என்கிற சங்பரிவார் கும்பலின் நீண்ட கால வேலைத்திட்டமும், பார்ப்பன சூழ்ச்சிக்குப் பலியாகி, திராவிட எதிர்ப்பை, பெரியார் எதிர்ப்பை மட்டுமே குலத்தொழிலாகக் கொண்டு செயல்பட்டோர் எதிர்பார்ப்பும் முழுமையாகப் பொய்த்துப்போய் விடவில்லை என்பது ஓரளவுக்கு உண்மைதான்.

தமிழ்நாட்டு அரசியலில் திராவிடம் என்பதும் பெரியார் என்பதும் வெறும் பெயர்கள் அன்று. அவைதான் இந்த மண்ணின் அரசியல் அடையாளம். அயோத்தி கரசேவைக்கு ஆள் அனுப்பிய ஜெயலலிதாவே ஆனாலும் தேர்தல் வெற்றிக்குப் பின் பெரியார் சிலைக்குத்தான் மாலை போட முடியுமே தவிர இராஜாஜி சிலைக்கு அன்று.

அப்படிப்பட்ட தமிழ்நாட்டில் கடந்தப் பத்தாண்டுகளாக பெரியாரின் சிலைகள் அவமதிக்கப்பட்டதன் பின்னணியில் இந்த திராவிட எதிர்ப்புச் சூத்திரதாரிகளே இருந்தார்கள் என்பதும் இன்னமும் தமிழ்நாட்டைச் சங்பரிவார் கும்பலுக்குக் காட்டிக்கொடுக்கும் வானரக் கூட்டமாக இவர்களே இருக்கிறார்கள் என்பதும் அம்பலமாகி வருகிற இந்த நேரத்தில்,




தமிழ்நாட்டை ஆரிய இருள் கவ்விப்பிடிக்கத் தடையாக இருக்கிற திராவிடச் சூரியனைத் தமிழ்த் திரை கொண்டு மறைக்க முயற்சிக்கிறார்கள் இவர்கள். இந்தக் கும்பலின் தமிழ்க்கோசம் வெளுத்துப்போன பகல் வேசம் என்பதோடு இவர்களை நம்பிப்போன இளைஞர்களும் உண்மை உணர்ந்து இந்த மாயவலையை அறுத்துக்கொண்டு வெளியேறி வந்தவண்ணம் இருக்கிறார்கள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

# பிரிக்க வேண்டியது தமிழ்நாடு இல்லை, உத்தரப்பிரதேசம்!

**சாரதா தேவி**

அய்யோ பாவம்! நயினார் நாகேந்திரனுக்கு என்னவெல்லாம் தோன்றுகிறது? ஆ.ராசா என்ற மகராசன் என்னவெல்லாம் தோன்றச் செய்துவிட்டார்? அவர்கள் நினைத்தால், தமிழ் நாட்டை இரண்டாகப் பிரித்துவிடுவார்களாம். ஒன்றியத்தில் அவர்கள் ஆட்சி என்று நமக்கு நினைவூட்டுகிறார்! 05.07.2022 அன்று, இராஜபாளையத்தில் அவர்கள் நடத்திய கேலிக்குரிய போராட்டத்தின் போது அவர் இப்படி நக்கலடித்து இருக்கிறார். அவருக்கு நாம் ஒன்று சொல்ல வேண்டி உள்ளது. அய்யா, நீங்கள் பதவியில்தான் இருக்கிறீர்கள்; ஆனால், ஆட்சி மக்களுடையது. பாவம், 60 சதவிகித மக்களின் எதிர்ப்பையும் மீறி சில கணக்கு முரண்களால் தான் உங்கள் ஆட்சியைச் சகித்துக் கொண்டு இருக்கிறார்கள் மக்கள்! தூக்கி எறியப்பட நேரம் குறிக்கப்படும் உங்களுக்கு இவ்வளவு கிண்டலும் கேலியும் ஆகாது.

03.07.2022 அன்று நாமக்கல்லில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் மாநாட்டில், "மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி" என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் தி.மு.க. வின் துணைப் பொதுச் செயலாளருமான ஆ.ராசா அவர்கள், "அண்ணாவின் கொள்கையை ஏற்று இந்திய இறையாண்மைக்குக் கட்டுப்பட்டுள்ளோம். மாநில சுயாட்சியைக் கொடுத்துவிடுங்கள். இல்லை என்றால் நாங்கள் பெரியாரின் தனித் தமிழ்நாடு முழக்கத்தை மீண்டும் எடுக்க வேண்டி வரும்" என்று பேசினார். ஆமாம்! பேசினார்!

எதற்காகப் பேசினார்? என்ன அவசியம் வந்தது இப்போது? இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் இரண்டாவது பெரிய மாநிலம் தமிழ்நாடு! வர்த்தகத் தலைநகரமாம் மும்பையை உள்ளடக்கிய மகாராட்டிரத்துக்கு அடுத்தபடியாக எங்கள் வரிப் பணத்தில்தான் நாட்டின் வரவு செலவுக் கணக்கை நீங்கள் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மாநிலத்தின் வரி வருவாயை எல்லாம், சரக்கு சேவை வரி என்ற பெயரில் மொத்தமாக வாங்கிக் கொண்டு, அதைத் திரும்பப் பெற போராடும் நிலைக்கு மாநிலங்களைத் தள்ளி இருக்கிறீர்கள். எங்கள் மாநிலத்தின் வளர்ச்சியும், சமூகப் பொருளாதார அலகுகளும், இந்திய நாட்டின் ஒட்டுமொத்த சராசரி அலகுகளைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்து நிற்கின்றன. இவை முற்போக்கான எம் அரசியல் கோட்பாடுகளால், எம் தலைவர்களின் விழிப்புணர்வுப் பணிகளால், எம் மக்களுடைய உழைப்பால் நாங்கள் அடைந்த உயரம்!



பொருளாதார அறிஞர்கள் ழான் டிரெஸ் மற்றும் அமர்த்தியா சென் ஆகியோர் குறிப்பிட்டதைப் போல தமிழ்நாடு மட்டும் தனிநாடாக இருந்திருந்தால் இந்தியாவைக் காட்டிலும் எவ்வளவோ முன்னேறிய நாடாக இருந்திருக்கும். வளர்ச்சி அடைந்த மாநிலம் என்பதால் ஒதுக்கீடுகளைக் குறைக்கிறீர்கள். இப்போது உங்கள் ஆட்சியில், உங்களை உள்ளே விடாத காரணத்துக்காக எங்கள் ஒதுக்கீடுகளைத் தாமதப்படுத்தவும், குறைக்கவும் தலைப்படுகிறீர்கள். வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் இல்லாமல், உங்களைக் கெஞ்சிக் கொண்டிருக்கும் இந்த நிலைமையைச் சீர் செய்ய நாங்கள் வாளாயிருக்க முடியுமா? அதனால் தான் எச்சரிக்கை விடுத்தார். என்ன தவறு?

காத்திருந்தவர்கள் போல, "ராசா பிரிவினை பேசுகிறார்; மிரட்டுகிறார்" என கூப்பாடு போடுகின்றனர் பா.ஜ.க.வினரும், அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள வட இந்திய ஊடகங்களும். "என் மீது கல்லடித்தால், உன் கையை முறிப்பேன்" என்று ஒருவர் சொல்வது மிரட்டலா? தற்காப்பா? தடுப்பா? நீங்கள் கல்லடிக்காமல் இருக்க அவர் விடும் எச்சரிக்கை தானே அது? அதைத் தான் ராசா செய்திருக்கிறார். சுயாட்சியைப் பறிக்காதீர்கள். எங்கள் கீழ்ப்படிதலை நாங்கள் விடவேண்டி இருக்கும் என்றால், சுயாட்சியைப் பறிக்காதீர்கள், எங்களைச் செயல்பட விடுங்கள், எங்களுக்கு உரியதை அளித்துவிடுங்கள். அவ்வளவு தான் அதற்குப் பொருள்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி அவர்கள், பல மாநிலங்களின் ஒன்றியம் தான் இந்தியாவே தவிர, அது எதேச்சதிகாரம் கொண்ட ஒரு தேசம் அல்ல என்று அண்மையில் கேரளா, வயநாட்டில் கருத்துத் தெரிவித்துள்ளார். பேராயக் கட்சி மாநில சுயாட்சித் தத்துவத்தைக் காலம் கடந்தாவது உணர்ந்து வரும்போது, சுயாட்சிக்கு எதிராக பா.ஜ.க.வினர் பொறுப்பற்றுப் பேசி வருகிறார்கள். சந்திரசேகர ராவ் தெலுங்கானாவில் 117 தொகுதிகள்தான் வைத்திருக்கிறாராம். 234 தொகுதிகளைக் கொண்ட தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கலாமாம். பல்லவ நாடாம்! பாண்டிய நாடாம்! சரியான கணக்குப் புலிதான் நயினார் நாகேந்திரன். உத்தரப்பிரதேசம் 403 தொகுதிகள் கொண்ட மாநிலமாயிற்றே, அதை நான்காக்கி விடுங்கள்.

முதலில்! மாம்லுக் பிரதேசம்! துக்ளக் பிரதேசம்! கில்ஜி பிரதேசம்! லோடி பிரதேசம்! எப்படி வசதி?!

●

## முன்பக்கத் தொடர்ச்சி

இப்போதுதான் நாம் முன்பைவிட திராவிட முழக்கத்தை ஓங்கி முழங்க வேண்டிய தேவை அதிகம் ஏற்பட்டுள்ளது. திமுக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதல்வர் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் தன்னைத் 'திராவிடக் கூட்டம்' என்று பிரகடனப்படுத்திக் கொண்டதும், ஒன்றிய அரசு என்றதும், இந்த ஆட்சியைத் திராவிட மாடல் ஆட்சி என்றதும் ஏதோ எதேச்சையாக நடந்ததோ அலங்காரத்திற்காக சொல்லப்பட்டதோ அல்ல என்பதும்,

எந்தப் பெயரைக் கேட்டால் உன் எதிரி நடுநடுங்குவானோ அந்தப் பெயரே உன் இனத்தின் விடுதலைக்கான அடையாளம் என்பார்களே அப்படித்தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'திராவிட மாடல்' என்பதைச் சொல்லியிருக்கிறார். சொல்லில் மட்டுன்று எது திராவிட மாடல் என்பதைச் செயலிலும் காட்டி வருகிறார்.

தமிழை, தமிழரை, தமிழ்நாட்டை அதன் தனித்தன்மை மாறாமல், தரம் குறையாமல், தகுதி குறையாமல் வரலாற்றின் பக்கங்களில் உயர்த்தி நிறுத்த திராவிடம் என்கிற அடையாளமே அடிப்படையாக இருந்தது; இருக்கிறது.

தமிழை சமஸ்கிருதப் பிடியிலிருந்து மீட்க, தமிழ்நாட்டை வடநாட்டின் சுரண்டலில் இருந்து காக்க, தமிழனைச் சுயமரியாதைக்காரனாய் வாழவைக்க திராவிடமே போர் நடத்திக் களம் வென்று இன்றளவும் காத்து நிற்கிறது.

இப்போதும் தமிழ்நாட்டைச் சூழத்துடிக்கும் ஆரியப்பார்ப்பன சூழ்ச்சிக்குத் தடையாக, சூழ்ச்சியை எதிர்கொள்ள, சூதுமதியாளர்களை விரட்டியடிக்க பெரியாரின் கைத்தடிதான் பேராயுதமாக இருக்கிறது. அதன் அடையாளம்தான் திராவிடம்!

எனவேதான் திராவிடம், திராவிடர் என்பதை முதல்வர் தொடர்ந்து சொல்கிறார்; அதுவும் தெரிந்தே சொல்கிறார்; துணிந்து சொல்கிறார்; தொடர்ந்து சொல்கிறார். நாமும் சொல்வோம்! ஓங்கிச் சொல்வோம்! நாம் திராவிடக் கூட்டம்! ஆம்! ஆரியத்தின் அடிமைத் தளையுடைக்கும் மானத் தமிழர்களாகிய நாங்கள் திராவிடக் கூட்டத்தினர்தான்!

●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பேரவையும், நட்புக் கழகமும்!

நாம் மொழியால் தமிழர்கள், இனத்தால் திராவிடர்கள். ஆனால் பிரிந்து கிடக்கின்றோம். அதைத்தான் பார்ப்பனியம் எதிர்பார்க்கிறது. சாதியால், மதத்தால் பிரித்து ஆளநினைப்பது அதன் வஞ்சகம். இப்பொழுது காலம் மாறிக்கொண்டு இருக்கிறது.

திராவிடர்களிடம் திராவிட உணர்வு இருக்கிறது. இருந்தாலும் மாற்று முகாம்களில் இருந்து வெளியே வரும் தோழர்களைத் தடுமாற விடாமல் கரம் நீட்டி வரவேற்கிறது "திராவிட நட்புக் கழகம்".

தந்தை பெரியாரின் சமூக நீதிதான், நட்புக் கழகத்தின் கொள்கை. திராவிடத் தோழர்கள் பூட்டிய அறைக்குள் பேசிக் கொண்டு இருப்பவர்களன்று, செயல்படுபவர்கள்.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வழியில், கார்ல் மார்க்ஸ் சொல்வதைப் போல ஒரு 'பூதமாக ' எழுந்து வருகிறது திராவிட நட்புக் கழகம்.

பொதுச் செயலாளரின் தேர்ந்த வழிகாட்டல், பொள்ளாச்சி மா. உமாபதி, சிற்பி செல்வராஜ், ஆ. சிங்கராயர், காசு. நாகராசன் உள்ளிட்டவர்களால் வளர்ச்சி பெற்றுக் கொண்டு இருக்கிறது, நட்புக் கழகம்.

இளைஞர்களைக் கொள்கையால் ஈர்த்து, மக்களிடையே பெரியாரிய மக்கள் இயக்கமாக நாளை உருவாகும் ஆற்றலுக்கு உரியது திராவிட நட்புக் கழகம்.

கடவுள் இருக்கிறதா இல்லையா என்பதல்ல கேள்வி.

சாதி ஒழியவேண்டும், பெண் விடுதலை வேண்டும், அனைவருக்கும் கல்வி வேண்டும், சமூகநீதி வேண்டும், இதுதான் தந்தை பெரியாரின் பார்வை.

இன்று நாடு ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க கைகளில் சிக்கிக் கொண்டு இருக்கிறது. சமூக நீதிக்கு அச்சுறுத்தல் இருக்கிறது.

பாசிசத்தை, சர்வாதிகாரத்தை பெரியாரிய, முற்போக்காளர்கள் ஏற்க மாட்டார்கள், என்றும் எதிர்ப்பார்கள்.

அதற்கான மக்கள் சக்தி, மக்களிடம் இருந்து உருவாக வேண்டும். அப்படியொரு நிலையைத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையும், திராவிட நட்புக் கழகமும் நாளை உருவாக்கும்.

ஆம்! இவை இரட்டைக் குழல் துப்பாக்கி.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408



தமிழகத்தில் முதன் முறையாகச் "சமூக நீதிக் கண்காணிப்புக் குழு " சேலம், பெரியார் பல்கலைக் கழகத்தில் ஆய்வு நடத்தியுள்ளது. இக்குழுவின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமையிலான ஆய்வுக் குழுவினர், 04-07-2022 அன்று இவ்வாய்வை மேற்கொண்டனர்.



மதுரை மாவட்டம் குசவன் குண்டு – குதிரைகுத்தி கிராமத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 03.07.2022 அன்று மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாகத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை வழக்கறிஞர் அணி தோழர் இராம.வைரமுத்து, மதுரை மாவட்ட செயலாளர் பி.அமர்நாத், இளைஞரணி தோழர் பா. கார்த்திகேயன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியை நாடகவியல் முனைவர் மு.இராமசாமி தொடங்கி வைத்தார்.



07-07-2022 அன்று திருச்சிக்குச் சென்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள், அங்குள்ள பேரவைத் தோழர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.



08-07-2022 அன்று கோவை திருப்பூர் மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில், 'சமூக நீதி மற்றும் சம நீதி' என்ற தலைப்பில் நடந்த மாணவர் சந்திப்பு பொதுச் செயலாளர் சுப.வீ வீரபாண்டியன் அவர்கள் தலைமையில், நடைபெற்றது. உடன் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பேராசிரியர் சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பேரவைத் தலைமைப் பொறுப்பாளர்கள் தோழர்கள் சுப.வீரபாண்டியன், சிற்பி செல்வராஜ், காசு. நாகராசன், பேரா.சாமி, புதுவை மாநிலப் பொறுப்பாளர் திராவிட மங்கை உள்ளிட்டோர் 8.7.2022 அன்று கோவை தோழர்களுடனான சந்திப்பில்.

# பெரியாரின் பி.ஆர்.ஓ.-க்கள்!

**வெற்றிச்செல்வன்**



ஆயிரம் தடவை விளக்கம் அளித்தாலும் அவதூறு என்னும் சேற்றை அள்ளி வீசுபவர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள் இந்த நாட்டில்.

02.07.2022 நாளிட்ட ‘இந்து தமிழ் திசை’ நாளிதழ் “பெரியார் மணியம்மை திருமணம் வெளிச்சத்துக்கு வந்தது எப்படி?” என்ற தலைப்பில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில், வழக்கு ஒன்றில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி சுவாமிநாதன் அவர்கள், தனது தீர்ப்பில் “ஒருவரது திருமணப்பதிவுக்கு முன்கூட்டியே அறிவிப்பு வழங்கப்பட்டு, அதைச் சார்பதிவாளர் திருமண அறிவிப்புப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்ததால்தான் 72 வயதான பெரியார் ஈ.வெ. ராமசாமிக்கும், 27 வயதான மணியம்மைக்கும் நடக்க இருந்த திருமணம் வெளிச்சத்திற்கு வந்ததாகவும் குறிப்பிட்டதாகச்” செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது எவ்வளவு அவதூறான, பொய்கள் நிறைந்த செய்தி என்பதை வரலாறு அறிந்தவர்கள் அறிவார்கள்.

வெளிச்சத்திற்கு வந்தது என்று தீர்ப்புரையில் நீதிபதி குறிப்பிடுவதற்கு அத்திருமணம் என்ன இருட்டிலா நடந்தது? அல்லது ரகசியத் திருமணமா? குறைந்த பட்சம் இருவரின் வயதையாவது சரியாகச் சொல்லவேண்டாமா?

தான் நடத்திய ‘குடிஅரசு’, ‘விடுதலை’ இதழ்களில் வெளிப்படையாக அறிவித்து, விளக்கம் அளித்து நடைபெற்றதுதானே பெரியார் - மணியம்மை திருமணம்.

பெரியார் மணியம்மையார் அவர்களைத் திருமணம் செய்வது தொடர்பாக, அவரது நண்பரான இராஜாஜியை 14.05.1949 அன்று திருவண்ணாமலையில் சந்தித்துப் பேசுகிறார். அச்சந்திப்பு பற்றி 28.05.1949 அன்று கோவையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் தமது உரையில் குறிப்பிடுகிறார். ”எனக்குப் பின் வாரிசு ஏற்படுத்துவது குறித்துத்தான் இராஜாஜியிடம் பேசினேன்” என்கிறார் அந்த மாநாட்டில்.

இயக்க நன்மைக்காக ஒரு சட்டப்பூர்வமான ஏற்பாடே பெரியாரின் திருமணம். இது குறித்து, திராவிடர் கழகத் தொண்டர்களிடையே ஏற்பட்ட குழப்பத்தைப் போக்க, தொடர்ந்து தனது ஏடுகளில் விளக்கமளிக்கிறார் தந்தை பெரியார். இது அவரது ஜனநாயகப் பண்பைக் காட்டுகிறது.

“பொதுமக்களுக்காக என்று நான் எடுத்துக் கொண்ட காரியம், அவர்கள் என்னை நம்பி நடந்து கொண்ட தன்மை ஆகியவைகளும், என் ஆயுள்வரையும், கூடுமான அளவு ஆயுளுக்குப் பின்னும் ஒழுங்கானபடி நடக்கும்படியாகப் பார்த்து என் புத்திக்கு எட்டின வரை அறிவுடைமையோடு நடந்து கொள்ள வேண்டியது எனது கடமையாகும்” என்று சொல்லும் பெரியார் (குடிஅரசு, 02.07.1949),

”இயக்கம் எப்படி இருந்தாலும் இயக்கத்துக்கு யார் தலைவராய் இருந்தாலும், என்னுடைய கொள்கைகளும், கொள்கைக்கு ஏற்ற பிரசாரமும், எனக்குப் பின்னும் நடந்தேற வேண்டும் என்கின்ற பேராசை எனக்கு உண்டு” என்று திருமணத்திற்கான காரணத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

அன்னை மணியம்மையாரைத் தனக்குப் பின்னான இயக்கத்தின் வாரிசாக்குவதைப் பற்றி, 28.06.1949 நாளிட்ட ‘விடுதலை’ இதழிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறாரே பெரியார்.

“எனக்கும் எனது பொருளுக்கும் சட்டப்படிக்கான வாரிசாக ஒருவரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமும், அவசரமுமாகையால் நான் 5, 6 வருஷ காலமாகப் பழகி நம்பிக்கை கொண்டதும், என் நலத்திலும், இயக்க நலத்திலும் உண்மையான பற்றும் கவலையும் கொண்டு நடந்து வந்திருக்கிறதுமான மணியம்மையை எப்படியாவது வாரிசுரிமையாக ஆக்கிக் கொண்டு அந்த உரிமையையும், தனிப்பட்ட தன்மையையும் சேர்த்து மற்றும் சுமார் 4, 5 பேர்களையும் சேர்த்து இயக்க நடப்புக்கும், பொருள் பாதுகாப்புக்குமாக ஒரு டிரஸ்ட்டு பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன்”.

வரலாறு இவ்வாறிருக்க, தள்ளாத வயதிலும் தளராது உழைத்த, தமிழரின் தனிப்பெருந்தலைவரின் புகழுக்கு எப்படியாவது களங்கம் ஏற்படுத்தி விட வேண்டும் என்று பூணூல் கூட்டம் புளுகைப் பரப்பித் திரிகின்றது.

‘எனக்கு என் எதிரிகளே விளம்பரதாரர்கள்’ என்று ஒருமுறை குறிப்பிட்டார் பெரியார். அது போல, ஒவ்வொரு முறையும் பெரியாரின் மீது அவதூறு பரப்புவதாக நினைத்து, அவரைப் பற்றிய செய்திகள் இன்னும் அதிகமாகப் பரவுவதற்கே வழிசெய்து, பெரியாரின் பி.ஆர்.ஓ-க்களாகத் திகழ்கிறார்கள் அக்கிரகாரத்து அம்பிகள். ●

**‘எனக்கு என் எதிரிகளே விளம்பரதாரர்கள்’ என்று ஒருமுறை குறிப்பிட்டார் பெரியார். அது போல, ஒவ்வொரு முறையும் பெரியாரின் மீது அவதூறு பரப்புவதாக நினைத்து, அவரைப் பற்றிய செய்திகள் இன்னும் அதிகமாகப் பரவுவதற்கே வழிசெய்து, பெரியாரின் பி.ஆர்.ஓ-க்களாகத் திகழ்கிறார்கள் அக்கிரகாரத்து அம்பிகள்.**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian